# தர்ம சாஸ்திரம்

**மஹாபாரதத்தில் :** சந்திர க்ரஹணம், ஸூர்யக்ரஹணம் இவைகளில் கங்கையில் ஸ்நானம் செய்ய வேண்டும் அல்லது வேறு மஹா நதிகளில் விதிப்படி ஸ்நானம் செய்ய வேண்டும்.

**யமன் :** கார்த்திக பூர்ணிமையில் புஷ்கர க்ஷேத்ரத்தில் ஸ்நானம் செய்தவன் எல்லாப் பாபங்களாலும் விடுபடுவான், மாக பூர்ணிமையில் ப்ரயாகத்தில் ஸ்நானம் செய்தவன் ஸகல துரிதங்களாலும்விடுபடுவான்.

**சாதாதபர் :** அங்காரக வாரத்தில் அமாவாஸ்யை சேர்ந்தால், அப்பொழுது கங்கையில் ஸ்நான மாத்ரத்தால், ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் உண்டாகும்.

**வ்யாஸர் :** எவனது கைகளும், கால்களும், மனதும் அடக்கப்பட்டிருக்கின்றனவோ, எவனுக்கு வித்தையும், தபஸ்ஸும், கீர்த்தியும் உள்ளனவோ, அவன் தீர்த்தத்தின் பலத்தை அடைகின்றான்.

**வாமனபுரானம் :** புண்யையான ஸரஸ்வதீ, வைதரணீ, மஹா புண்யையான கங்கை, மந்தாகினீ, மதுப்ரவாஹா, அம்சுமதீ, பாபத்தை அகற்றும் கௌசிகீ, மஹாபுண்யையான த்ருஷத்வதீ என்ற இந்த நதிகளின், வர்ஷா காலத்தில் பெருகும் ஜலமும் புண்யமாகும்.

**மஹோபநிஷத்தில் :** மனிதன், ஊர்த்வ புண்ட்ரம் தரித்தவனாய், பரமேச்வரனும், ஸாங்க்ய யோக சாஸ்த்ரங்களால் அறியக்கூடியவனுமான நாராயணனை த்யானித்தால், ஸகல ஸம்ஸார பாரங்களாலும் விடுபடுவான், இங்கேயே விஷ்ணுவையும் அடைவான்.

**மார்க்கண்டேயர் :** மந்திரம் இல்லாமலும், பவித்ரம் இல்லாமலும் ஊர்த்வ புண்ட்ரம் இல்லாமலும் ப்ராம்ஹணரால் செய்யப்பட்ட கர்மம் எதுவோ அது முழுவதும் ஆஸூரம் என்று அறியவும். செய்தவனும் நரகத்தை அடைவான்.

**வேதவியாசர்:** ஸ்ரீமத் பாகவதம், சோகம், மோகம், பயத்தைப் போக்கக்கூடியது, பரமாத்மாவான கிருஷ்ணர் இடத்தில் பக்தியைப் பெருக்கக் கூடியது, வேதங்களின், இதிகாசங்களின் சாரம் ஆத்ம ஆனந்தத்தை அளிப்பது, பாகவதத்தைக் கேட்க வேண்டும் என்று விரும்புபவர்களுடைய உள்ளத்தில் பகவான் நிலையாக எழுந்து அருளுகிறார்.

**கபிலர் :** பகவானுடைய அழகிய சாந்தமான திரு உருவத்தை எப்போதும் மனதில் தியானிக்க வேண்டும். இடைவிடாமல் தியானிக்க வேண்டும், நிற்கும்போதும், நடக்கும்போதும், உட்கார்ந்திருக்கும்போதும், படுத்திருக்கும்போதும் அவருடைய திருஉருவத்தை தியானித்தபடியே இருக்க வேண்டும்.

**நாரதர் :** கோபிகைகள் பிரேம பக்தியாலும், கம்சன் பயத்தாலும், சுசுபாலன் முதலியோர் விரோதத்தாலும், யது குலத்தோர் உறவாலும், கிருஷ்ணரை அடைந்தார்கள்.

**பகவான் :** தேவர்கள் இடத்திலும், வேதம், பசுக்கள், ப்ராம்ஹணர்கள், சாதுக்கள், வேதம் கூறும் தர்மத்திலும் (பகவான்) என்னிடத்திலும், மிக்கபகை எவனுக்கு ஏற்படுகிறதோ அவன் சீக்கிரத்தில் அழிவான்.

**ப்ரஹலாதன் :** புலன்களால் கிடைக்கும் சுகத்தைப் பெற முயற்சி செய்யக்கூடாது. ஏனென்றால் இந்த முயற்சியில் ஆயுள் வீணாகக் கடந்து விடும். தன் ஆயுள் கடந்து கொண்டிருப்பதை அறிவதில்லை. வந்த வினைகளை அனுபவித்துக் கொண்டு, மேலும் வினைகளை உருவாக்கிக் கௌண்டு, தன் குடும்ப விஷயங்களில் சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பவன் ஒரு நாளும் பற்றை விடமாட்டான்.

**ப்ரஹலாதன் :** ஆத்மா அழிவற்றது, மாறாதது, ஸ்வயம் ஜோதியாக இருப்பது, உடல் வேறு ஆத்மா வேறு என்று அறிந்தவன் நான் எனது என்னும் அறியாமையை விட்டுவிட வேண்டும்.

குருவுக்குப் பணிவிடை புரிவது, குருபக்தி, தனக்கு கிடைத்ததை எல்லாம் ஈஸ்வரார்ப்பணம் ஆக்குவது, சத்சங்கம் எனப்படும் சாதுக்களான பக்தர்களோடு சேர்ந்திருப்பது, பகவானை பூஜிப்பது.

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம், என்றும் ஆறையும் வென்று பகவானின் உண்மையான பக்தனாக முடியும்.